# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

**O.S.23/2023**

## CNR.No.TNCB19000

Date: 01.07.2025 PW1

| பெயர் | விவேகானந்தன் | வயது | 40 |
|---|---|---|---|
| த/பெ | ராஜேந்திரன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 1st July 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதியை சுமார் 5 வருடங்களாக எனக்கு தெரியும். வீரனின் விலாசம் என்னவென்றால் ஜீவா நகர், சிறுமுகையில் வசித்து வருகிறார். வழக்கில் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எந்த காலையில் எவ்வளவு விஸ்தீரணத்தில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் 1978 ல் வீரன் விலைக்கு வாங்கினார். தாவா சொத்தின் காலை எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் மொத்த அளவு 900 சதுரடி ஆகும். எந்த தேதியில் சொத்தை பார்வையிட்டேன் என்றால் ஒப்பந்ததேதிக்கு 3 மாதத்திற்கு முன்பு பார்வையிட்டேன்.

எதற்காக பார்வையிட்டேன் என்றால் இடம் இருப்பதாக சொன்னதால் பார்வையிட்டேன். தாவா சொத்தை விற்பனை செய்வதாக சொன்னதன்பேரில் பார்வையிட்டேன். யார் மூலமாக சொத்து விற்பனைக்கு வருவதாக கேள்விப்பட்டேன் என்றால் ஒரு ரமேஷ் என்கிற புரோக்கர் சொல்லி பார்த்தேன். ரமேஷ் என்பவர் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே இடைத்தரகர் அலுவலகம் வைத்திருக்கிறார். யார் யார் தாவா சொத்தை பார்க்க சென்றோம் என்றால் நானும் எனது அம்மா எனது நண்பர் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் சென்றோம். நாங்கள் பார்க்க சென்ற சமயத்தில் தாவா சொத்தின் ஆவணங்கள் அனைத்தும் ரமேஷிடம் இருந்தது என்றால்

சரிதான். ஜெராக்ஸ் நகல் வைத்திருந்தார்.

நாங்கள் சொத்தை பார்க்கும்போது மேற்படி சொத்து வேறு ஒருவர் பெயரில் விற்கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டிருந்த ஆவணம் ரமேஷ் வைத்திருந்தார் என்றால் வேறு ஒரு நபரிடம் கடன் வாங்கியிருந்ததால் அதை செட்டில்மெண்ட் செய்து எனக்கு விற்பனை செய்வதற்காக சொல்லியிருந்தார். தாவா சொத்தின் நான்கு எல்லைகள் எப்படி இருந்தது என்றால் அளவுகள் எனக்கு சரியாக தெரியாது. செக்குபந்தி எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு சொத்தை விலைக்கு வாங்கும்போது அதன் அளவுகள் மற்றும் செக்குபந்தியை பார்த்து சரியாக உள்ளதா என்று பார்த்து வாங்கவேண்டும் என்றால் சரிதான். வில்லங்கம் ஏதேனும் உள்ளதா என்று வில்லங்க சான்றை பார்த்துதான் வாங்கவேண்டும் என்றால் சரிதான்.

தாவா சொத்தை பார்த்து 3 மாதம் கழித்து ஒப்பந்தம் செய்ய வேண்டிய காரணம் என்னவென்றால் ஆவணங்களை பார்வையிட்டுதான் ஒப்பந்தம் மேற்கொண்டோம். நான் பார்க்கும்போது யாருடைய பெயரில் வில்லங்கம் இருந்தது என்றால் பெயர் எனக்கு தெரியாது. ஆனால் வில்லங்கம் இருந்தது. வில்லங்கம் யார் பெயரில் இருந்ததோ அவர் ரமேசுக்கு வேண்டியவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வில்லங்கத்தை நீக்குவதற்கு ரமேசிடம் நான் பணம் கொடுத்தேன் என்றால் வீரன் முன்பாக ரமேசிடம் ரூ. 4 லட்சம் கொடுத்தேன். ரமேஷ் யாரிடம் கொடுத்து வில்லங்கத்தை நீக்கினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இதே போன்று நான் எத்தனை சொத்துக்கள் வாங்கி விற்பனை செய்துள்ளேன் என்றால் இது போன்று வாங்கியதில்லை. விற்பனை செய்ததும் இல்லை.

என் தாயார் பெயரிலும் என் பெயரிலும் சொத்துக்கள் வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். வில்லங்கமானது வாங்கியதில்லை. பொதுவாக ஒரு ஒப்பந்தம் செய்யும்போது சொத்தின் அசல் ஆவணங்களை கொடுக்க மாட்டார்கள் என்றும் கிரையம் செய்யும்போதுதான் கொடுப்பார்கள் என்றால் ஆவணங்கள் இல்லாமல் தொகையை கொடுக்க முடியாது. முக்கால் வாசி தொகைக்கு மேல் கொடுத்ததால் ஆவணத்தை பெற்றுக் கொண்டேன். யாருடைய பெயரில் வில்லங்கம் இருந்ததோ அவரிடம்தான் தாவா சொத்தின் அசல் ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த அசல் ஆவணங்களை ரமேஷ் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். இதேபோன்று ரமேஷ் வேறு ஒரு நபரிடம் அசல் ஆவணங்களை வாங்கி கொடுத்து கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் அதுபற்று எனக்கு தெரியாது.

ரூபாய் 4 லட்ச ரூபாயை பணமாக கொடுத்தேன். ஒப்பந்த பத்திரம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் பத்திர எழுத்தர் சசிபிரியா தயார் செய்தார். அவர் வழக்கறிஞர்.

ரமேஷ்தான் ஆவணங்களை கொடுத்து கிரைய ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்ய சொன்னார் என்றால் சரிதான். ரமேஷ் நிறைய நபர்களுக்கு கடன் வாங்கி கொடுத்திருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ரமேஷ் இடைத்தரகரா இருந்து கொண்டு கடன் கேட்டு வருபவர்களிடம் அவர்களுடைய சொத்துக்களின் அசல் ஆவணங்களை வாங்கி வைத்துக் கொண்டு அதன்பேரில் விற்கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டு கடன் கொடுத்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் இடைத்தரகர் என்பதால் அவரை போய் பார்த்தேன்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.07.01 19:39:28 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.